(50) உத்திரமேரூர் தொகுதியில் சாயநூல் பட்டறையிலிருந்து வெளியேறும் கழிவு நீர் குறித்து.

திரு. க. நரசிம்மபல்லவன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ''உத்திரமேரூர் தொகுதியிலுள்ள முத்தியால் பேட்டை, ஐயன்பேட்டை, நாயக்கன்பேட்டை, வண்ணியப் பேட்டை ஆகிய பகுதிகளில் சாயநூல் உற்பத்தி நடைபெறு வதால் வெளிப்படும் கழிவு நீரால் அப்பகுதியில் குடிநீர் மற்றும் சுகாதாரம் பாதிக்கப்பட்டுள்ளது குறித்த'' அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

(பதில் இல்லை)

(51) தாம்பரம் டி. பி. சானடோரியம் குறித்து

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு எல்ல. இராசமாணிக்கம் அவர்கள், ''தாம்பரம் எலும்புருக்கி நீக்கு மருத்துவ மனை (டி.பி. சானிடோரியம்) வேறு இடத்திற்கு மாற்றப்பட்டு விடுமோ என்ற நிலை குறித்த'' கவன ஈர்ப்பு தீர்மானத்தை மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வர அறிவிப்புக் கொடுத்திருக்கிறார். அவர் இருக்கையில் இல்லை.

(பதில் இல்லை.)

(52) உசிலம்பட்டி அரசு மருத்துவ மனையில் ஆம்புலான்ஸ் வசதி ஏற்படுவது குறித்து.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. பி. கே. எம். முத்து ராமலிங்கம் அவர்கள், ''மதுரை மாவட்டம், உசிலம்பட்டி தாலூகா, உசிலம்பட்டி நகரிலுள்ள அரசு மருத்துவமனையில் ஆம்புலன்ஸ் வசதி இல்லாததால் கடந்த 11–4–1986 அன்று காலை நடந்த சாலை விபத்தில் சிகிச்சை அளிக்க மதுரை அரசு இராஜாஜி மருத்துவமனைக்கு எடுத்துச்செல்ல இயலாத தால் இரண்டு பேர் இறக்க நேரிட்டதால் அப்பகுதி மக்களிடையே ஏற்பட்டுள்ள நிலை குறித்த'' கவன ஈர்ப்பு தீர்மானத்தை மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டுவர அறிவிப்புக்கொடுத்திருக்கிறார். அவர் இருக்கையில் இல்லை.

(பதில் இல்லை.)